1974 மார்ச் 22]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(ஆ) விவரங்கள், @அவைமுன் தனியே வைக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த திரிபுரா மாநில அதிகாரிகள் நம்முடைய ஊராட்சி முறை பற்றி என்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்? எழுத்து மூலமாகத் தெரிவித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தக் குழுவினர் சென்னையிலிருந்து புறப்பட்டு செங்கல்பட்டு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டுப் பல்வேறு வேலைகள், நடைபெறுகிற திட்டங்களை எல்லாம் பார்வையிட்டு அவற்றுக்காக எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். பாராட்டியதோடு மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட இந்த நல்ல ஏற்பாடுகளுக்கு திரிபுரா அரசு அகர்தாலாவிலுள்ள ஊராட்சி இயக்குநர் தமிழக அரசுக்கு 5—12—1973-ம் நாளிட்ட தந்தி மூலம் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

வீட்டு வசதி வாரிய அலுவலர்கள்

* 567 வினா.—**திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சார வாரிய அலுவலர்களுக்கு போனஸ் தொகை தரப்படுவதைப் போல வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்கும் போனஸ் தொகை வழங்க அரசினரிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

Employees in Ribbon factories

* 568 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the total number of men and women employed in the Art Silk Ribbon Factories in Coimbatore district as on date ; and

(*b*) their wage structure?

@ 760-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 22

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயற்கைப்பட்டு சிப்பன் தொழிற்சாலைகள் இரண்டு உள்ளன. இவற்றில் 15 ஆண்களும், 15 பெண்களும் வேலையில் உள்ளனர்.

(இ) அவர்களது ஊதிய அமைப்பு பின்வருமாறு :—

ஊதிய அமைப்பு.	நாளொன்றுக்கு உயர்ந்தளவு வீதங்கள்.	நாளொன்றுக்கு குறைந்தளவு வீதங்கள்.
(1)	(2)	(3)
முறுக்கேற்றுதல்	ரூ. 2.62	ரூ. 1·25
சுற்றுதல்	ரூ. 2·00	ரூ. 1·25
சிட்டம் சுற்றுதல்	ரூ. 1·37	ரூ. 1·75
சிப்பம் செய்தல்	ரூ. 2·12	ரூ. 2·12
நெய்தல்	ரூ. 3·50	ரூ. 3.00

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பள விகிதம் எல்லாம் எப்போது நிர்ணயம் ஆயிற்று ? அதிகப்படி சம்பளம் வேண்டுமென்ற கோரிக்கை தந்தார்களா ? என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது இப்போது நிலவி வருகிற நிலவரம். அதிகச் சம்பளம் கேட்கவில்லை. இரண்டு இடங்களிலேதான்—சேலத்திலுள்ள குமாரபாளையத்திலும், கோவையிலுள்ள பவானியிலுந்தான்—இந்தத் தொழில்கள் நடக்கின்றன. வேறு எந்தவிதமான கோரிக்கையும் தற்போது இல்லை.

Meeting of Transport Development Council

* 569 *Q.*—THIRU A. M. RAJA :
THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether a meeting of the Transport Development Council was held at Delhi during February 1973; and

(*b*) if so, the important decisions taken at the meeting?